1979 ஏப்ரல் 17]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. இரா. அமிர்தராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர்-கன்னியாகுமரி ஆகிய இந்த இடங்கள் இரண்டும மிகவும் புகழ்வாய்ந்த இடமாகவும், புண்ணிய ஸ்தலங்களாகவும் கருதப்பட்டு வருகிறது. இந்த இடங்களுக்கு தினசரி நூற்றுக் கணக்கானவர்கள் சுற்றுலா பேருந்து மூலமாகவும் பல்லவன் விரைவு பேருந்துகள் மூலமாகவும் வந்து போகிறார்கள், ஆனால் இந்த பேருந்துகள் செல்லக்கூடிய சாலைகள் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாகவும், மேடு பள்ளம் ஆகவும் இருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய சாலையை விரிவு படுத்தும் வகையில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்திக்கு சிறப்புத் திட்டம்.

*வினா எண். 695— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தும் சிறப்புத் திட்டம் ஏதும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை † அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது

† 263—ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, இப்போது வடஆற்காடு மாவட்டத்தில் எந்த அளவுக்கு உணவு உற்பத்தியாகிறது? தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் இது எத்தனை சதவிகிதம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டில் எவ்வளவு உற்பத்தி என்று கேட்டால் சரியான பதிலைச் சொல்ல முடியும். இல்லாவிட்டால் 1947-லிருந்து சொல்ல ஆரம்பித்தால் அரை மணி நேரம் ஆகும். ஆகவே, சரியான கேள்வியை சரியான நேரத்தில், சரியானபடி கேட்டால் சரியான பதிலைச் சொல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: 1947-லிருந்து விவரங்களை சொல்ல முடியாது அமைச்சர் அவர்களால். 1978-க்குப் பின்னால் சொல்லியிருந்தால் போதும். தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் 25 சதவீதம் உற்பத்தியாகக் கூடிய மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்று சொல்லப்படுகிறது. இதை உணர்ந்து, மேலும் அங்கு விவசாயத்தை மேம்படுத்துவதற்கு விதைகள், உரங்கள் இவை மட்டும் கொடுத்தால் போதாது— உண்மையிலேயே உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றால் நீர்ப்பாசன வசதிகளை எல்லாம் பெருக்க வேண்டும். அதற்கு வசதியாக மோர்தானா திட்டம், மேலரசம்பட்டு போன்ற அணைகட்டுத் திட்டங்களை எல்லாம் சிறப்புத் திட்டங்களாக எடுத்துக் கொண்டு கட்ட முன்வர வேண்டும். மேலும், வட ஆற்காடு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பெருக்குவதற்காகச் சிறப்பு மாநாட்டையும் நடத்துவதற்கு முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அருமையான பேருரை ஆற்றியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பாசன வசதிகளை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே அரசு பல திட்டங்களை புலன்ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. மேலரசம்பட்டு போன்ற அணைக் கட்டுத் திட்டங்களையும், நிறைவேற்றுவதற்கு அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. புல்லூர் அணைக்கட்டு பற்றி இன்னொரு கேள்வி வருகிறது. அதில் நன்றாக பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.